# அஸ்வகோஷின் அடையாளம் நாடகம் உணர்த்தும் அரசியல்

**முனைவர் ஆ.முத்துலட்சுமி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை- 625514.**

59

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழக வரலாறு என்பது பன்னெடுங்காலத்தில் தோன்றிய சீறூர்த் தலைமை என்னும் இனக்குழு வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டது. அரசுகள் பல தோன்றி மறைந்துள்ளன. சிற்றரசுகள் முதல் பேரரசுகள் வரை தமிழகத்தை ஆட்சி புரிந்துள்ளன. வடவர்களின் ஆட்சியும் ஐரோப்பியர் ஆட்சியும் இங்கு நடந்துள்ளன. மன்னராட்சி முதல் மக்களாட்சி வரை மக்களை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றவர்களாக ஆட்சியாளர்கள் இருந்தாலும் அவர்களது நோக்கம் தன்னலம் சார்ந்ததாகவும், மக்களின் நலன் விரும்பாததாகவும் இருந்திருக்கிறது என்பதை அரசியல் வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இலக்கியங்களில் அரசுகளை விமர்சிக்கும் பாங்கு பண்டைக் காலத்திலிருந்து தொடர்ந்துவருகிறது. நாடகங்கள் தமிழின் தொன்மையான கலைச் செயல்பாடாக இருந்து வருகிறது. இந்நாடக மரபில் நவீன நாடகங்கள் சமூக, அரசியல் விமர்சனங்களை முன்வைத்து பகடியாகவும் கிண்டலாகவும் நிகழ்த்தப்பட்டுள்ளன. இன்றைய அரசியல் நிலைமைகளை நவீன நாடகாசிரியர்கள் பலர் தம் நாடகங்களில் முன் வைத்துள்ளனர். அஸ்வகோஷின் நாடகங்கள் அரசியல் பகடியை முன் வைப்பவை. எளிதாக புரியும் வகையில் அரசியல்வாதிகளைத் தம் நாடகங்களில் காட்சிப்படுத்துவர். அவருடைய அடையாளங்கள் நாடகமானது அரசியல்வாதிகளின் பார்வையில் மக்கள் நடத்தப்படும் முறையினைப் பற்றி எடுத்துரைக்கிறது. இதில் தனியன் பாத்திரம் மக்களின் பிரதிநிதியாக அரசுகளைக் கேள்வி கேட்கும் வகையில் தன் கருத்தை முன் மொழிகிறார். அடையாளங்கள் நாடகம் உணர்த்து அரசியல் சார்ந்த கேள்வியை இக்கட்டுரை முன் வைக்கிறது.

**குறிப்புச் சொற்கள்** : அரசு, குடிமக்கள், வாழ்க, மந்தையாடுகள், தமிழ், உதித்தெழும் இளஞ்சூரியன், கதர் குல்லாய், வேலை, நிலம், சோறு.

**முன்னுரை**

மனித இனம் உருவாகி வளர்ச்சி அடைந்த காலத்தில் அரசு என்ற அமைப்பு உருவாகியிருக்கவில்லை. அது உருவானதற்கு அடிப்படையான காரணங்கள் இருக்கின்றன. பாகுபாடு, பாகுபஸ்தி என்பன அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். பாகுபாடு என்பது பிறருடையது என்பதை அடையாளப்படுத்தும் ஒன்று. பாகுபஸ்தி என்பது சொத்துப் பகிர்வு என்பதாகும். மனிதர்கள் உடைமைச் சமூகமாக மாறிய நிலையில் குழுத் தலைமை படிப்படியாக அரசமைப்பாக உருவாக்கம் பெற்றது. விவிலியத்தில் வருவது போல தம் இனத்திற்காகச் சண்டையிட ஒரு மன்னன் வேண்டும் என்பதை அடியொற்றி உருவானதே இனக்குழுத் தலைமை அல்லது சிற்றரசு என்பதாகும். அதிலிருந்து பேரரசுகள் உருவாவதற்கு ஒவ்வொரு அரசின் மீதும் கொண்ட காழ்ப்புணர்வு, சொத்துடைமையின்பால் கொண்ட வெறி ஆகியனவற்றைக் கொள்ளலாம். சொத்துடையவர்கள் தம் சொத்தினை வாரிசுகளுக்கு கைமாற்றிச் செல்வது போல அரசும் வாரிசு அடிப்படையில் மாற்றப்பட்டன. அரசியல் என்பது படை கொண்டு பகை நாட்டை வெற்றி கொள்வது மக்களின் நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் ஓர் அமைப்பாகக் கொள்ளலாம். இந்திய அரசியல் வரலாறு பெரும் கால அளவு கொண்டது. தமிழகத்தின் ஆட்சி, அரசுகள் பற்றி தொல்லியல்

நோக்கிலான ஆய்வுகள் ஐந்தாயிரம் ஆண்டுகள் கொண்டனவாக உருப் பெறுகின்றன. ஆனால் அரசுகள் எப்பொழுதும் எளியவர்களுக்கு எதுவும் செய்ததில்லை. வலுத்தவர் பக்கமே நின்றிருக்கிறது என்பதே வரலாறாக இருக்கிறது. அரசியலைப் புரிந்து கேள்வி கேட்பவர்கள் அரசுக்கும் தேசத்திற்கும் விரோதிகளாக மாறி விடுகிறார்கள் என்பது இன்றைக்கும் உள்ள யதார்த்த நிலைமையாக இருக்கிறது. தமிழ் நாடகங்களில் பகடியாக கூறப்படும் செய்திகள் பலவும் அரசியல் நையாண்டிகளாக இருக்கின்றன. அரசுகளைப் பற்றிய விமர்சனங்களாக இவை இருந்தாலும் அரசால் நேரடியாகத் தண்டிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். நாடகாசிரியர்கள் புராணங்களையும், இதிகாசங்களையும் நாடகமாக்கினர். பின்னர் சமூக, அரசியல் விழிப்புணர்வு தரும் நாடகங்களை இயக்கி நடித்தனர். பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களையும் அரசியல் கருத்துக்களையும் திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள் வெளிப்படுத்தினர். அவ்வாறான நாடகாசிரியர்களில் ஒருவர்தான் அஸ்வகோஷ் ஆவார். இவருடைய இயற்பெயர் இராஜேந்திரச் சோழன் என்பதாகும். கடவுள் பற்றிய கருத்துக்களை மறுத்துரைத்து கடவுள் என்றால் என்ன என்று நூல் எழுதினார். அறிமுகக் கையேடாக விளங்கும்படி மார்க்சிய மெய்யியல் எழுதினார், சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், சமூக நீதி சார்ந்த ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவராக இருக்கின்றார். அவருடைய அடையாளங்கள் நாடகம் அரசியல் பகடியாக வெளிப்படுகிறது. அதில் பங்கு பெறும் பாத்திரங்களில் அரசியல் விமர்சனங்களை வெளிப்படுத்தும் வகையில் தனியன் என்ற பாத்திரத்தை மொழிகிறார். தனியன் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தின் பிரதிநிதியாக மட்டுமன்றி வெகுசன மக்களில் ஒருவனாகவும் இருந்து அரசியல்வாதிகளைக் கேள்வி கேட்கிறான். இதனால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனைகள் மிகுதியாக இருக்கின்றன. அடித்துத் துரத்தப்படுபவனாகவும், தலைவர்களின் உணர்ச்சி மிகுந்த பேச்சுக்களைக் கண்டு காணாமல் போகிறவனாகவும், இருக்கின்றான். பகடியுடன் எழுதப்பட்டுள்ள இந்த நாடகத்தில் சாமானிய மக்களின் அரசியல் பற்றி எடுத்துரைக்கிறது.

**அரசியல்**

அரசு என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன. நிர்வாகத்திற்கான பல்வேறு துணை அமைப்புகள் கொண்ட பெரும் அலகே அரசு ஆகும். அரசின் தோற்றம் இனக்குழுத் தலைமையிலிருந்து உருவானது என்று கூறுகின்றனர். "இராச்சியத்தின் தோற்றத்தைக் கூறும் கோட்பாடுகளில் சமுதாய ஒப்பந்தம் மிகப் பிரசித்தமானது. மக்கள் ஒன்றுசேர்ந்து தமக்கென ஓர் அரசியலை அமைத்துக் கொண்டனர் என்பது இதன் கருத்து" (ஆர்.பாஸ்கரன், அரசியல், ப.21) என்ற கூற்றிலிருந்து சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் தமக்கான நிர்வாக அமைப்பை உருவாக்கிக் கொள்வதே அரசு எனப்படுகிறது. அரசியல் குறித்த பல்வேறு பார்வைகள் முன்வைக்கப்படுகின்றன. அரசு என்பது தண்டனை வழங்கும் கருவிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பு என்பதும் பொருந்தும் "அரசு சட்டப்படி வல்லந்த முறைகளைப் பயன்படுத்த முடியும். தான் ஆணையிட்டுள்ள ஒழுக்க விதிகளுக்கு மக்கள் கீழ்ப்படியுமாறு அரசு வற்புறுத்தக் கூடும். அவ்வாறு கீழ்ப்படியாதவர்களைத் தண்டிப்பதன் மூலம் மக்கள் அவற்றிற்குக் கீழ்ப்படியுமாறு செய்யலாம்." (எர்னஸ்ட் பார்க்கர், சமூக அரசியல் கொள்கையின் அடிப்படைகள், ப.5) என்ற கூற்று இதனை விளக்குகிறது. அரசுகள் மக்களைத் தன்வயப்படுத்தும் செயலை எப்போதும் செய்து வருகின்றன. தமக்கு எதிரான கருத்துக்கள், கொள்கைகள் ஆகியவற்றை ஒடுக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கின்றன. கேள்வி கேட்கக் கூடாது என்ற தன்மையை சர்வாதிகார அரசுகள் கொண்டுள்ளன.

**இன்றைய அரசின் நிலைமை**

இன்றைய இந்திய, தமிழக அரசியல் நிலைமை என்பது ஒரு படித்தான தன்மையைக் கொண்டு விளங்குகின்றன. பெரும்பாலும் மக்கள் அரசின் சட்டங்களுக்கு அடிபணிந்து போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு இல்லாதவர்களை திருவள்ளுவரின் பாணியில் களையாகக் கருதி வேரோடு பிடுங்கி எறியும் பணியை மேற்கொள்கின்றனர். இன்றைய சூழல் மக்கள் அரசுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டிய தன்னிலைகளாக இருந்தாலும் போராட்டங்களையும் செய்வதற்கு மக்களாட்சி முறையிலான அரசுகள் வழி வகுத்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டு வாக்கில் உருவான நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான முதலாளிய அரசுகள் சமத்துவம், சகோரத்துவம், மக்களாட்சி என்னும் முழக்கத்தினை வைத்தன. இதன் அடிப்படை நோக்கமாக "உச்ச அதிகாரம் உடையவர்கள் குடிமக்களதாம். ஆனால் அவர்கள் அனைவரும் அரசின் செயல்பாடுகளில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலாது. எனவே குடிமக்கள் தம் எண்ணங்களையும் தேவைகளையும் அரசுக்குத் தெரிவிக்க பிரதிநிதிகளைத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவைக்கு மட்டுமே அரசின் செயல்பாட்டிற்கான சட்டங்களை இயற்றும் உரிமை உண்டு. இயற்றப்பட்டச் சட்டங்களை அமலாக்கம் செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அமலாக்கத் தலைவர் நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்வார்" (க.நாராயணன், அரசியல் சிற்பிகள், ப.306) என்ற கூற்றில் ஜெர்மி பெந்தாமின் கருத்து கூறப்படுகிறது. அரசியல் மக்களாட்சித் தலைமையாக உருப்பெற்று நடைபெறும் விதம் பற்றிக் கூறப்படுகிறது. ஆனால் இந்த மக்களாட்சி முறையும் மக்களுக்கு எதிரானதாக இருப்பதையே கண்கூடாகக் காணமுடிகிறது. கொடுங்கோன்மை என்ற திருவள்ளுவரின் சொற்றொடர் இதற்குப் பொருத்தமாக இருக்கும் "கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வரும் குற்றம் கூறுதல். அது முறைமை செய்யாமையும், அருள் செய்யாமையும் பிறர் நலியாமல் காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பல வகைப்படும்" (கு.மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, ப.152) என்ற கூற்றினை இன்றைய காலத்திற்கும் பொருத்திக் காணலாம். இன்றைய அரசுகள் தம் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மக்களை வதைக்கின்றன என்பதைக் காணமுடிகிறது.

**தமிழ் நாடகங்களில் அரசியல்**

தமிழ் நாடகங்கள் அரசின் செயல்பாடுகளைக் கூறுவனவாக அவற்றை விமர்சிப்பனவாக பழங்காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளன. அதாவது அரசின் செயல்களைப் பற்றிக் கூறும் போது போர்கள், வெற்றிகள் போன்றவற்றை அரசன் முன் நடித்துக் காட்டிய கூத்து மரபினரின் வளர்ச்சி நிலையாக இன்றைய நாடகங்களைக் காணமுடியும். புராண, இதிகாச நாடகங்களிலிருந்து நவீன நாடகங்கள் சமூக அவலங்களையும் அரசியல் விமர்சனங்களையும் கொண்டு விளங்குகின்றன. தேசபக்தி அல்லது சகோதர துரோகம் என்னும் விடுதலை இயக்க நாடகமானது மக்களாட்சியின் மாண்புகளை சீர்குலைக்கும் ஆட்சியாளர்கள் மற்றும் மக்கள் பற்றி எடுத்துரைக்கிறார். "இந்த நாடகத்தை மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் உரிமையாளர் எஸ்.எம்.சச்சிதானந்தம் பிள்ளை எழுதியுள்ளார். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்பே எழுதப்பட்ட இந்நாடகத்தில் மக்களாட்சி என்ற பெயரால் நடைபெறும் பல கேலிக்கூத்தான விஷயங்களை அன்றே எடுத்துச் சொல்லியிருப்பது வியக்கத்தக்கது. மக்களாட்சியின் மாண்பு அறியாதவர்கள் தம் வாக்குரிமையை ரூபாய் ஐம்பதுக்கும்

நூறுக்கும் விற்பதும் பணம் கொடுத்து வாங்கியவன் நாட்டை கொள்ளையடித்துச் சுரண்டிக் கொழுப்பதும் வாழ்க்கை நிகழ்வாகிப் போன காலத்தில் அதை அன்றே அக்கதாபாத்திரத்தின் வாயிலாக பேச வைத்திருப்பது எத்துணைப் பொருத்தம். அரசு நிர்வாகத்தையும் ஆட்சியர்களின் நடவடிக்கைகளையும் கேலியாகவும் கிண்டலாகவும் வெளிப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது” (கீரைத் தமிழன், விடுதலைப் போரில் தமிழ் நாடகங்கள், ப.90) என்ற கூற்றிலிருந்து விடுதலைக்கு முந்தைய நாடங்களிலேயே மக்களாட்சியின் இழிந்த தன்மை பற்றிச் சுட்டப்பட்டிருக்கிறது.

**அஸ்வகோஷின் அடையாளங்கள் நாடகம்**

தமிழ் நாடக வரலாற்றில் நவீனத்துவ நாடகங்கள் சமூக, அரசியல் பேசுபவனவாக உருவாக்கம் பெற்று வளர்ச்சி பெற்றன. தற்காலத்திய நாடகாசிரியர்களில் குறிப்பிடத்தக்க அரசியல் விமர்சனங்களை உள்ளடக்கிய நாடகங்களை எழுதியவர், இயக்கியவர் என்று கருதப்படுபவர்களில் ஒருவராக அஸ்வகோஷ் இருக்கின்றார். இருவருடைய நாடகங்கள் கூர்மையான அரசியல் பேசுபவனவாக இருக்கின்றன. அடையாளங்கள் என்னும் நாடகத்தில் மன்னராட்சி காலம் முதல் மக்களாட்சி காலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலம் வரையிலும் மக்கள் ஏமாற்றப்படுவதும், அவர்களது இழிந்த தன்மையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதும் ஆட்சியாளர்கள் மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாத தன்மையும் குறித்து எழுதியுள்ளார். இதில் வரும் பாத்திரங்களில் கேள்விகளைத் தொடர்ந்து அரசுகளை நோக்கி வைக்கும் ஒன்றாக தனியன் என்ற பாத்திரம் அமைகிறது, தனியன் என்ற பாத்திரம் தனியொரு மனிதனைக் குறித்ததாக இல்லாமல் ஒட்டுமொத்த எதிர்க் கருத்துக்களின் உருவமாக இருக்கின்றது.

**தனியின் அரசியல் கேள்விகள்**

அடையாளம் நாடகத்தின் தொடக்கத்தில் தனியன் மன்னராட்சியில் மந்திரி பிரதானிகளுடன் அமர்ந்திருக்கும் போது அரசனின் செயல்களை விமர்சிக்கின்றான். அவன் கொடுக்கும் பரிசிலை பெற மறுத்து வேலை வேண்டும் என்று கேட்கிறான். மந்திரிகளை மன்னர் நோக்கி இவன் என்ன சொல்கிறான். என்னை அவமதிக்கிறானா என்று கேட்கிறான். மன்னரின் மகனது பிறந்த நாள் பரிசை பெற மறுக்கும் இவன் நாட்டின் விரோதி என்று கட்டமைக்கப்படுகிறான். “தனியன் : (பரிசுப் பொருளை வாங்கக் கைய நீட்டாமல் தனியே நின்று அரசே மன்னிக்க வேண்டும். நான் பரிசு பொருட்களை வாங்கிச் செல்வதற்காக இங்கே வரவில்லை – மன்னர் : (கோபத்துடன்) என்ன? – தனியன் : ஆமாம் அரசே இப்பொருட்களை வாங்கிச் சென்று இன்று ஒரு நாள் மட்டும் சந்தோஷமாக இருக்க நான் விரும்பவில்லை அரசே. நானோ ஏழை, கடைநிலை வகுப்பைச் சேர்ந்தவன், சொந்தமாக வேலை வெட்டி, நிலபுலன் எதுவும் இல்லாதவன். நம்முடைய ராஜாங்கத்தின் ஏதாவது வேலை போட்டுத் தந்தாலோ அல்லது காணி நிலம் தந்தாலோ சந்தோஸத்துடன் அதைப் பெற்றுச் சென்று அதைக் கொண்டு பிழைத்து என் வாழ்நாளைக் கழித்துக் கொள்வேன் அரசே”(அஸ்வகோஷ் நாடகங்கள், ப.14) என்று கூறுவதன் மூலம் தன் உரிமையைக் கேட்பவனாக தனியன் இங்கு சித்திரிக்கப்படுகிறான். இந்தத் தனியன் எல்லா அரசுகளை நோக்கியும் இதே கேள்வியைக் கேட்கிறான். எந்த அரசும் உரிய பதில்களைத் தெரிவிப்பதில்லை.

தனியன் கேட்ட கேள்வியால் சினமுற்ற அரசன் அமைச்சரை நோக்கி என்ன இது என்று கேட்க, அமைச்சர் முதலில் பரிசுப் பொருளைப் பெற்றுச் செல்லுமாறு வலியுறுத்துகிறான். ஆனால் தனியனோ தான் பரிசுப் பொருளை வாங்க முடியாது என்று தீர்க்கமாக மறுக்கிறான். அமைச்சர்

மன்னரின் மகனான இளவரசர் பிறந்த நாளில் பரிசை மறுப்பது தேசத் துரோகம் என்று கூறி அவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார். “சேனாதிபதி : இவனை இப்படி சும்மா அனுப்பி விடக் கூடாது மன்னா. இளவரசர் பிறந்த நாளில் நமது குடிமக்கள் அனைவரும் தங்கள் திருக்கரத்தால் தரும் பரிசுப் பொருட்களை மகிழ்ச்சியுடன் பெற்றுச் செல்லும் போது இவன் ஒருவன் மட்டும் வாங்க மறுத்து சபையறிய தங்களை அவமானம் செய்ததோடு நமது வம்சத்தையும் பழித்திருக்கிறான். அரசே ஆகவே இவனை நம் காவலர்களை விட்டுச் சில கசையடிகள் கொடுத்து அதன் பிறகே நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் அரசே – மன்னர் : சரி அப்படியே ஆகட்டும் – மக்கள் : ஆகா அருமையான தீர்ப்பு மன்னர் வாழ்க, இளவரசர் வாழ்க, மன்னர் பரம்பரை வாழ்க” (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.15) என்று அவனை அடித்துத் துரத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கின்றார். அதற்கு மக்களும் மந்தையாடுகள் போல தலையசைக்கின்றனர். தனியன் அடித்துத் துரத்தப்படுகிறான்.

**மக்களாட்சியில் தனியன்**

மன்னராட்சி முடிந்து மக்களாட்சி தொடக்கம்பெறுகிறது. விடுதலை பெற்ற நாட்டில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது. அப்போதும் தனியன் தன் நிலை மாறுமா, விடுதலைதான் பெற்று விட்டோமே வேலை கிடைக்குமா என்று கேட்கிறான். கேள்வியே கேட்கக் கூடாது வாழ்க கோஷம் மட்டும்தான் போட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறான். திட்டங்கள் தீட்டப்படும் போது உங்கள் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறி காங்கிரஸ் தலைவர் கூற முதல் திட்டத்தில் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இரண்டாம் திட்டத்தில் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மூன்றாம் திட்டத்தில் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. சுதந்திரம் பெற்று விட்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று கூறிய கதர் குல்லாய் பாத்திரத்திடம் தனியன் கூறுகிறான் “நீங்க சொல்றதெல்லாம் வாஸ்தவம் தாங்க ஆனா சுயராஜ்யம் வந்தா நெலமில்லாதவங்களுக்கு நெலம் கிடைக்கும், வேல இல்லாதவங்களுக்கு வேல கெடைக்கும், கடை நிலை மக்களெல்லாம் படிச்சி முன்னேற வாய்ப்புக் கெடைக்கும்ன்னீங்களே. சுயராஜ்யம் வந்து இவ்ளோ நாளாச்சி இன்னும் ஒன்னும் கெடைக்கலிங்களே எப்பங்க கிடைக்கும் – க.குல்லாய் : அதுவா அது வந்து (சற்றுச் சுதாரித்து) அதெல்லாம் உடனே எல்லாருக்கும் கெடைச்சிடுமா? அதுக்காகத்தான் நாங்க திட்டமெல்லாம் வச்சிருக்கோம். இது எல்லாருக்கும் எல்லாமும் செய்துடுவோம்- தனியன்: எப்பங்க – க.குல்லாய் : அதெல்லாம் வரும்போது செய்வோம். அது வரைக்கும் திட்டங்கள் வெற்றி பெறணுமில்ல. திட்டங்கள் வெற்றி பெற்றாதான் எதுவும் கிடைக்கும்” (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.24) என்பதில் தனியன் திட்டங்கள் எப்பொழுது வெற்றி பெறும் என்று கேட்க அதற்கு கதர் குல்லாய்க்காரரான தலைவர் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கூறுகிறார். அதாவது திட்டங்கள் வெற்றி என்று கோஷமிட வேண்டும் என்று கூறுகிறார். மக்களை எப்பொழுதும் கோஷமிடும் மந்தையாக மாற்றி வைத்திருப்பதையே ஆசிரியர் கூறுகிறார். முதல் திட்டம், இரண்டாவது திட்டம், மூன்றாவது திட்டம் என்று எத்தனைத் திட்டம் போட்டாலும் மாற்றம் இல்லை என்று தனியன் கூறுகிறான். தங்கள் மேல் நம்பிக்கை இல்லையா என்று கேட்கும் கதர் குல்லாய் தலைவரிடம் இல்லை நம்பிக்கை இல்லை என்கிறான். இது தேசத் துரோக குற்றம் என்று அவனை அடித்து வெளியேற்றுகின்றனர்.

அடுத்த ஆட்சியில் காங்கிரஸ் தோற்று திராவிட இயக்கங்கள் ஆட்சியைப் பிடிக்கின்றன. அப்போதும் இதே பிரச்சினைகளை எழுப்புகிறான். அங்கும் தம் மொழி, இனம் ஆகிய உணர்ச்சிகளைத்

தூண்டி ஆட்சியைப் பிடித்து தமக்கான நலன்களை செய்து கொள்கின்றனர் என்றும் மக்களுக்கு யாதொரு பயனும் இல்லை என்றும் நிலை இருப்பதை தனியன் சுட்டிக் காட்டுகிறான். "பு.தலைவர் : தமிழர் மானம் காக்க, தமிழர் மரபு காக்க தமிழனுக்கென்று ஒரு புதிய கட்சியும் புதிய சின்னமும் இளங்காலைக் கதிரவனென உதித்தெழும் போது நீ மட்டும் சோர்வோடு குந்தியிருப்பது ஏன் தம்பி சோர்வு நீங்கி தெம்பெய்து நீயும் இந்தத் தமிழர் இயக்கத்தில் சேர்ந்து தமிழர் மானம் காக்க புறப்படு. தமிழகத்துக்குப் புதுவாழ்வு கிட்டும்போது உனக்கும் புதுவாழ்வு கிடைக்கும் – தனியன்: இதனால வேலையில்லாதவங்களுக்கு வேலையும் நெல்மில்லாதவங்களுக்கு நெலமும் கெடைக்குங்களா கடைநிலை மக்கள் கடைத்தேற முன்னேற வாய்ப்புக் கெடைக்குங்களா? – பு.தலைவர் : வேலையும் நிலமும் என்ன தம்பி தமிழகத்தில் பாலாறும் தேனாறும் பெருகி ஓடத்தான் போகிறது. தமிழக மக்கள் தெவிட்ட தெவிட்ட அதை அள்ளிப் பருகத்தான் போகிறார்கள். அந்த நன்னாளில் உதயத்திற்கான ஒரு போர்முரசம்தான் இது" (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.28) என்று திராவிட இயக்கத்தவர்கள் அள்ளித் தெளித்த வாக்குறுதிகள், அதன் தன்மைகள், மக்களை நடத்தும் முறைகள் ஆகியன பற்றிக் கூறப்படுகிறது.

அதன் பின்னர் திரைத்துறையில் மக்கள் ஏற்பைப் பெற்றவர் ஆட்சி தொடக்கம் பெறுகிறது. அப்போதும் தனியனின் கேள்விகள் அப்படியே இருக்கின்றன. புதுமைத் தலைவர் என்று ஆசிரியரால் அறிமுகப்படுத்தும் திரைத்துறை சார்ந்த தலைவனின் அறிமுகத்தை "புதுமைத் தலைவர் மேலே அந்தரத்தில் இருந்து குதித்துக் கத்திச் சண்டை குத்துச் சண்டை, எல்லாம் போட்டுப் பாட்டுப்பாடி ஆட்டமெல்லாம் ஆடிக் காட்ட மக்கள் விசிலடித்து கை தட்டுகிறார்கள்." (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.34) என்று கூறுகிறார். அதாவது மக்கள் தலைவர் என்று அறிமுகம் செய்யும் போது குறியீடாக அவரைப் புரிந்து கொள்வதற்காக இவ்வாறு கூறுகிறார். திராவிட இயக்கத்திலிருந்து பிரிந்து வந்ததற்கான காரணத்தை புதுமைத் தலைவர் "இங்கு கூடியிருக்கும் தாய்மார்களே, எனதருமை உடன்பிறப்புகளே, ரத்தத்தின் ரத்தமே சதையின் சதையே உயிரின் உயிரே தலையின் தலையே கையின் கையே காலின் காலே விரலின் விலே நாம் கணக்குக் கேட்டதையும் அவர்களை விட்டுப் பிரிந்து வந்ததையும் வைத்துத் தூற்றுகிறார்கள்." (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.35) என்று குறிப்பிடுகிறார். இதில் அவர் யாரென்று அறியப்படுகிறது. அவரது ஆட்சியின் போதும் தனியனின் கேள்விகள் தொடர்கின்றன. "பு.தலைவர் : சாதாரண ஏழை எளிய மக்களின் வாக்குகளிலேதான் நான் ஆட்சி பீடம் ஏறி இருக்கிறேன் என்பதை நான் நன்றாக அறிவேன். அவர்கள் நான் எவ்வளவோ செய்வேன் என்று எதிர்பார்க்கிறார்கள் அவர்களுக்கு நான் ஏதாவது செய்தாக வேண்டும். – தனியன் : நிலமில்லாதவங்களுக்கு நிலம், வேலையில்லாதவங்களுக்கு வேல குடுப்பீங்களா, கடைநிலை மக்கள் முன்னேற வழி செய்வீங்களா" (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.36) என்று கேட்கிறான். அதற்கு தலைவர் பொருத்திருந்து பாருங்கள் என்று கூறுகிறார். பின்பு தலைவர் தன்னை தேடி வருபவர்களுக்கு உணவு தருகிறார். அவர் வள்ளல் என்றெல்லாம் பேசுகின்றனர். ஒரு வேளை சாப்பாடு போட்டால் போதுமா என்று தனியன் கேட்கிறான். எப்போதெல்லாம் உணவு தருகிறார்களோ அப்போதெல்லாம் அவர்களை வாழ்க என்று கோஷமிடும் மக்கள் அப்படியே தொடர்கின்றனர்.

இவ்வாறான மந்தைத் தனம் அடிமை மனோபாவம் ஒழிந்தால்தான் மக்களுக்கு வேண்டிய உரிமைகளை பெற முடியும். அரசுகளை கேள்வி கேட்க முடியும். தலைவரை எதிர்த்துக் கேள்வி

கேட்கும் மக்கள் உருவாக வேண்டும். அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் போராட வேண்டும் என்று கூறி ஒரு குழு கோஷமிடுகிறது “நாங்களா நாங்க வேலையில்லாதவங்களுக்கு வேல, நெலமில்லாதவங்களுக்கு நெலம், சமூகத்துல தாழ்த்தப்பட்டும் பிற்படுத்தப்பட்டும் வந்திருக்கிற கடைநிலை மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றம் இதையெல்லாம்தான் கேக்கறம்” (அஸ்வகோஷ் நாடகங்கள், ப.40) என்று ஊர்வலத்தில் ஒருவர் கூற. சோறு கிடைக்குமா என்று மக்கள் கேட்கின்றனர். ஏன் ஒருவரிடம் உணவு கேட்க வேண்டும், வேலை கொடுத்தால் உழைத்து சாப்பிட முடியும். அதைத்தான் கேட்க வேண்டும் என்று கூறுகின்றன. அந்த ஊர்வலத்தினை காவல்துறை கொண்டு அடித்துத் துரத்துகின்றனர். ஊர்வலத்தினர் காவலர்களின் அடக்குமுறைக்கு அஞ்சி ஓடினால் அவர்கள் விரட்டத்தான் செய்வார்கள். எதிர்த்து நிற்க வேண்டும் என்று கூறுகின்றனர். அப்படியே எதிர்த்து நிற்க காவல் துறை பின்வாங்குகிறது என்று குறிப்பிடுகிறார். தனியனின் கேள்விகளுக்கு விடையாக இது அமைகிறது, போராட்டம் செய்து உரிமைகளைப் பெற வேண்டும் என்பதை பொதுவுடைமை இயக்கங்கள் வழிதான் பெற முடியும் என்பதுஅவருடைய கருத்தாக அமைகிறது,

**முடிவுரை**

தமிழகத்தில் ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பதையே இந்த நாடகத்தில் அஸ்வகோஷ் வலியுறுத்த விரும்புகிறார். மக்களின் பிரதிநிதியாக தனியன் என்னும் பாத்திரத்தின் மூலம் தன் கருத்தை வெளிப்படுத்துகிறார். மன்னராட்சி முடிந்து மக்களாட்சி தொடர்ந்தாலும் மன்னராட்சியின் கொடுங்கோன்மை தொடரத்தான் செய்யும். மக்கள் அரசியல்படுத்தப்பட வேண்டும். எதிர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். சோறு கொடுத்தால் வாழ்க கோஷம் போடும் மந்தைத் தனம் ஒழிய வேண்டும் என்பதை நாடகத்தின் மூலம் சம கால அரசியலை பகடி செய்து வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் காணமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. அஸ்வகோஷ், அஸ்வகோஷ் நாடகங்கள், மங்கை பதிப்பகம், சென்னை, 2013.
2. கீரைத் தமிழன், விடுதலைப் போரில் தமிழ் நாடகங்கள், பாரதி புத்தகாலயம், சென்னை, 2022
3. ஆர்.பாஸ்கரன், அரசியல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 2000
4. க.நாராயணன், அரசியல் சிற்பிகள், மாரி பதிப்பகம், புதுச்சேரி, 2003
5. எர்னஸ்ட் பார்க்கர் (தமிழில் – மோ.வள்ளுவன் கிளாரன்ஸ்), சமூக அரசியல் கொள்கையின் அடிப்படைகள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 2022
6. கு.மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2007